கட்டிடங்கள் குறித்த நான்காவது அறிக்கையையும் கூட்டுறவு துறை குறித்த ஐந்தாவது அறிக்கையையும் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியின் மூலம் 1989-90ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய 43 முதல் 45 வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் 49 மற்றும் 50-ஆவது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கின்றேன் போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் அவைக்கு அளிக்கப்படுகின்றன. ஆதலால் இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதி கிடைத்தவுடன், அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்தசட்ட முன்வடிவு 1990 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பொது விற்பனை வரி இரண்டாவதுதிருத்தசட்ட முன்வடிவு. 1990,

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.